
# எப்போதுமே நியாயத்தீர்ப்பில் மூன்று வகைப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள்




**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

40. இப்பொழுது, ஆபிரகாம் இந்த ஆகாரத்தை அங்கு வெளியே எடுத்துக்கொண்டு வந்து, அந்த மனிதர்களுக்கு முன்பாக வைத்தான், அவர்கள் புசித்தார்கள். இப்பொழுது, **அவர்கள் எதற்காக பிரயாணம் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க ஆபிரகாம் ஆவல் கொண்டவனாக இருந்தான், ஏனென்றால் அங்கேயிருந்த அவர்களில் ஒருவர், அந்த மிக முக்கியமான ஒருவர் தேவன் என்று அவன் அறிந்திருந்தான்.** அது தேவன் தான் என்று அவன் அறிந்திருந்தான்; அவன் அவரை ஏலோகிம் என்று அழைத்தான். எனவே இப்பொழுது, அது எதை குறித்துக்காட்டினது?

**அவர்களில் இரண்டு பேர் எழுந்து, சோதோமுக்குள் இறங்கிப் போவதை நாம் கண்டுகொள்கிறோம்.** அவர்கள் அங்கே பிரசங்கம் பண்ணும்படியாக இறங்கிச் சென்றார்கள், வெளியே அழைக்கப்பட (வேண்டியவர்களை) வெளியே அழைக்கும்படியாகப் போனார்கள். **அவன் அங்கே இறங்கிச் சென்று, பிரசங்கம் பண்ணத் தொடங்கின போது, அவர்கள் அநேக**

**அற்புதங்களைச் செய்யாமல் அவர்களை குருடாக அடித்தார்கள் என்பதை நாம் காண்கிறோம். சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுதல் குருடாக அடித்துப் போடுகிறது.** ஆனால் அங்கே...

41. **இப்பொழுது, எப்போதுமே நியாயத்தீர்ப்பில் மூன்று வகைப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். மணவாட்டி கிறிஸ்துவோடு கூட திரும்பி வருகிறாள் என்று தானியேலில் நாம் கண்டுகொள்கிறோம்.** ஆதிகாலத்து நாட்களோடு கோடாகோடி பேர் வந்தார்கள். நியாயசங்கம் உட்கார்ந்தது, புஸ்தகங்கள் திறக்கப்பட்டது, வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது, அதுதான் ஜீவ புஸ்தகம் (Book of Life). பாருங்கள் நித்திரை செய்யும் கன்னிகை நியாயத்தீர்ப்புக்காக மேலே வருகிறாள். தேவபக்தியற்றவர்களுடைய ஒரு புஸ்தகமும் திறக்கப்பட்டது, அவர் வெள்ளாடுகளிலிருந்து செம்மறியாட்டை வேறுபிரித்தார், **ஆனால் எடுத்துக்கொள்ளப்பட்ட சபையானது அவரோடு கூட திரும்பி வருகிறது.**

**இயேசு மூன்று தடவைகள் வருகிறார். அவர் முதலாவது தமது மணவாட்டியை மீட்டுக் கொள்ள வந்தார். இரண்டாவது முறை அவர் அவளைக் கொண்டு செல்ல** (catch Her away) **வருகிறார். மூன்றாவது முறை அவளோடு கூட வருகிறார்**: அவருடைய மணவாட்டியை மீட்டுக்கொள்ளவும், அவருடைய மணவாட்டியைப் பெற்றுக்கொள்ளவும், அவரையும் அவருடைய மணவாட்டியையும் இராஜாவும் இராணியுமாக, திரும்ப பூமியின் மேல் கொண்டு வந்து, அவருடைய பிதாவாகிய, தாவீதின் சிங்காசனத்தின் மேல் உட்கார வைக்கிறார்.

42. இப்பொழுதும், எல்லா நேரத்திலுமே அங்கே மூன்று வகைப்பட்ட ஜனங்கள் இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியும். நாம் இன்றும் அதைக் கவனிக்கிறோம். அங்கே லூத்தரன்களும், மெதோடிஸ்டுகளும், பெந்தெகோஸ்தேகாரர்களும் இருந்திருக்கிறார்கள். அங்கே பாவிகளும், தேவபக்தியற்றவர்களும், நித்திரை செய்யும் கன்னிகையும், உண்மையான கன்னிகையும் இருக்கிறார்கள். எப்போதுமே அவ்வாறு உள்ளது. இப்பொழுது, அங்கே சோதோமியர்கள் இருந்தார்கள் என்றும், அங்கே லோத்து இருந்தான் என்றும், வெதுவெதுப்பான

(lukewarm - அரைமனதுடைய, அரைகுறை ஆர்வமுடைய) சபை, இங்கே அவர்களை விட்டு தன்னை வேறுபிரித்து, தனியாக (apart - சேராமல், பிரிந்து) வாழ்ந்து கொண்டிருந்த ஆபிரகாம் இருந்தான் என்றும் நாம் கண்டுகொள்கிறோம். இப்பொழுது, "சபை" என்ற அந்த தனிப்பட்ட வார்த்தைக்கு "வேறுபிரித்தல் (separation)" என்று அர்த்தம்.

இஸ்ரவேலர்கள் வனாந்தரத்திற்குள் வருவது மட்டுமாக அவர்கள் தேவனுடைய ஜனங்களாக இருந்தார்கள், அவர்கள் வெளியே அழைக்கப்பட்டிருந்த போது, அவர்கள் தேவனுடைய சபையாக இருந்தார்கள். "சபை" என்பதற்கு "வெளியே அழைக்கப்பட்டு, வேறுபிரிக்கப்பட்டு, ஒரு பிரத்தியேகமான நோக்கத்திற்காக ஒதுக்கி வைத்தல்" என்று அர்த்தம். **ஆபிரகாம் தெரிந்துகொள்ளப்பட்ட சபையாக இருந்தான். லோத்து நித்திரை செய்யும் கன்னிகையாக அல்லது சடங்காசார சபையாக** (formal church) **இருந்தான். அதன்பிறகு அங்கே சோதோமியராகிய** (Sodomite) **பாவிகள் இருந்தார்கள்.**

43. இப்பொழுது, கவனியுங்கள், சோதோமியரும், அங்கேயிருந்த சம்பிரதாய சடங்கைக் கொண்டவர்களும், லோத்து தன்னுடைய சம்பிரதாய நிலையில் இருந்தான்... இப்பொழுது, அவன் ஒரு நல்ல மனிதன் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. “அந்தப் பட்டணத்தினுடைய பாவங்கள் அவனுடைய நீதியுள்ள ஆத்துமாவை வாதித்தன (vexed - எரிச்சலுட்டின, கண்டதும் வெறுப்படையச் செய்தன, கோபமூட்டின, வெறுப்பூட்டின, தொல்லை கொடுத்தன - மொழிபெயர்ப்பாளர்)”. ஆனால் அங்கே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட, அழைக்கப்பட்ட, முன்குறிக்கப்பட்ட சபை இருந்தது, அவனுக்கு 75 வயதாக இருந்தபோதே அவன் அழைக்கப்பட்டு, அவனுக்கு ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது, நிச்சயமாகவே அது இருக்கும் என்று கூறும்படியாக சோதனையை அனுமதிக்கும்படியாக. அவன் அதை உறுதியாக நிச்சயப்படுத்திக்கொள்ளும் நிலைக்கு இங்கே சற்று அதிகத் தூரமாக நாம் புரிந்துகொள்ளும் வரையில் காத்திருந்தான். சரி. அவன் கொண்டிருக்கப் போகிற அந்தப் பிள்ளையைக் குறித்து அவனிடம் கூறினார். **ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தில் தடுமாறிக்**

**கொண்டிருக்கவில்லை.** எத்தனை கூடுதல் டாலர்கள் இங்கே வைக்கப்பட்டிருந்தாலும், அவனால் சோதோமில் எவ்வளவு பணக்காரனாக இருந்திருக்க முடிந்திருந்தாலும், அவனால் என்ன செய்ய முடிந்திருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, **அவன் தேவனோடு கூட தரித்திருந்து, வாக்குத்தத்தத்தை பற்றிப்பிடித்துக் கொண்டான்.** **அதுதான் தெரிந்து கொள்ளப்பட்ட சபை.** அவர்களில் சிலர் மெதோடிஸ்டுகளிலும், சிலர் பாப்டிஸ்டுகளிலும், சிலர் பெந்தெகோஸ்தேகாரர்களிலும் இருக்கிறார்கள். **தெரிந்து கொள்ளப்பட்ட சபையானது எல்லா குழுக்களிலிருந்தும் வெளியே அழைக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.** அது சரியே. **அந்த சத்தத்திற்கு செவிகொடுக்கிற ஒன்று அதுதான்.**

44. இயேசு வந்த போது, அவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவர்கள் ஏன் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை? **அது மிகவும் காலதாமதமாகும் வரையில் அவர்கள் ஒருபோதும் அதை அடையாளம் கண்டுகொள்ளவேயில்லை.** **எலியா**

**தேவனுடைய தீர்க்கதரிசி என்று அவர்கள் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.** ஏன், அவனை கேலிபண்ணும்படியாக, அவர்கள் தங்கள் பிள்ளைகளை வெளியே அனுப்பினார்கள், அவனை அந்தப் பிள்ளைகள் வழுக்கைத் தலையனே என்று அழைத்தார்கள், ஏனென்றால் அவன் ஒரு சிறு பையனாக இருந்த போதே அவன் தலை வழுக்கையாக போய்விட்டது. அவர்களுக்கு எதுவுமே தெரியாதிருந்தது. **அவன் ஏதாவது தீர்க்கதரிசியாக இருந்தானா என்பதையும் அவர்கள் நம்பவில்லை. நிச்சயமாகவே அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை. அவர்கள் ஒருபோதும் அதை விசுவாசிப்பதில்லை.** இயேசு, "நீங்கள் வெள்ளையடிக்கப்பட்ட சுவர்களாக இருக்கிறீர்கள், நீங்கள்-நீங்கள் தீர்க்கதரிசிகளின் சுவர்களை பளபளப்பாக்குகிறீர்கள், அவர்களை அங்கே உள்ளே வைத்தது நீங்கள் தான்" என்று கூறவில்லையா.

**எரேமியாவையோ, ஏசாயாவையோ, தீர்க்கதரிசிகளில் எவரையும் கவனித்துப் பாருங்கள். அதெல்லாம் முடிந்து போகும் மட்டுமாக அவர்கள் அதை அடையாளம் கண்டுகொள்ளவேயில்லை.** யோவான் வந்த

போது, என்ன... என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை. “உரைக்கப்பட்டிருந்த எலியா அவன் தான்” என்று இயேசு தாமே கூறினார். தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள், யோவான் தான் அந்த எலியா என்று சீஷர்களும் கூட அறிந்திருக்கவில்லை. **இயேசு வந்தபோதும், அவர் இயேசு என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை; அவர் தான் கிறிஸ்து என்று அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. ஆனால் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்களோ, “என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவிகொடுக்கின்றன.” அவர்கள் தான் அதை அடையாளம் கண்டுகொண்டார்கள்.**

*செய்தி: ஆபிரகாம்*, பிப்ரவரி 11, 1961

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*